கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்திலே, இவற்றைச் சில ஜில்லாக்களிலும் வைக்க வேண்டுமென்று முடிவு செய்யப்பட்டு தஞ்சை, கடலூர் ஆகிய இடங்களில் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது.

திரு. கே. ஏ. மதியழகன் : நம்முடைய மாநிலத்திலிருந்து அந்நிய நாட்டுச் செலாவணியைப் பெற்றுத் தருகிற அப்பளம், ஊறுகாய் போன்றவற்றைத் தயாரிப்பதற்கு பயிற்சி கொடுத்து அவற்றை உற்பத்தி செய்து ஏற்றுமதி செய்வதற்கான செயல் குறிப்பை இந்த அரசாங்கம் தயார் செய்திருக்கிறதா ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : ஏற்கனவே உள்ள மாதர் சங்கங்களே ஊறுகாய், அப்பளம் போன்றவற்றைத் தயாரிப்பதற்குப் பயிற்சி அளிக்கிறார்கள். 'ஹோல்டால்' கூடச் செய்வதற்குப் பயிற்சி கொடுக்கிறார்கள். தரமான ஊறுகாய், அப்பளம் தயார் செய்தால் அந்நியச் செலாவணி பெற வழி இருக்கிறது.

ஸ்டவ் அடுப்பு வெடிப்பால் உயிரிழந்தோர்

* 13 கேள்வி.—திரு. ஆ. தங்கவேலு : கனம் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1964-65-ல் சென்னை நகரில் ஸ்டவ் அடுப்பு வெடித்து ஆபத்தான நிலைமையில் மருத்துவ மனைகளில் அனுமதிக்கப்பட்டவர்கள் எத்தனை பேர் ?

(இ) அவர்களில் உயிரிழந்தவர்கள் எத்தனை பேர் ?

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM : (a) Nil.

(b) Does not arise.

திரு. ஆ. தங்கவேலு : ஸ்டவ் அடுப்பில் காற்று அடிப்பதற்கு இவ்வளவுதான் அடிக்கவேண்டுமென்பதற்கு 'கேஜ்' இல்லாத காரணத்தால் அது வெடித்து அநேகம் பேர் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். ஆகவே, இந்த ஸ்டவ் அடுப்பைத் தடைப்படுத்த அரசாங்கம் முன் வருமா ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : மூலக் கேள்விக்குப் பதில் சொல்லும்போது 1965-66-ல் இந்த மாதிரி விபத்து ஒன்றும் ஏற்படவில்லை என்று சொன்னேன். ஏதோ கெரசின் விளக்குகளில் இருந்து தீப்பிடித்து விபத்து ஏற்படுவதைப் பற்றிக் கனம் அங்கத்தினர் கூறுகிறார் போல் இருக்கிறது.

Wild life sanctuary at Kodikarai

* 14 *Q.*—SRI V. SANKARAN : Will the Hon. the Minister for Co-operation be pleased to state whether the Government have proposed to set up a wild life and bird sanctuary at Kodikarai of Thanjavur district with tourist attraction?

கனம் திரு. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் : தஞ்சாவூர் மாவட்டத்திலுள்ள கோடிக்கரையில் வந்தடையும் வனவிலங்குகளையும், பறவைகளையும் பாதுகாப்பதற்காக, அங்கு வன விலங்குகள் உய்விடம் ஒன்றை அமைக்கும் செயற் குறிப்பு உள்ளது.

திரு. வை. சங்கரன் : அந்தச் செயற் குறிப்பு விவரங்களை எல்லாம் அறியலாமா ?

கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் : அங்கிருக்கக் கூடிய நிலங்களில் 6,022 ஏக்கரில் நாலாயிரத்துச் சொச்சம் ஏக்கர் ரிசர்வ் பாரஸ்டின் கீழ் இருக்கிறது. தேவஸ்தானத்திற்கு இருக்கிற நிலங்களை எடுத்துவிடுவது என்றால் பாரஸ்ட் ஆக்டின் கீழ் கொண்டு வந்து இதைச் செய்ய வேண்டுமென்று நினைக்கிறோம்.

திரு. கே. ஏ. மதியழகன் : கோடிக்கரை வன விலங்கு உய்விடம் பற்றி பரிசீலனை செய்கிற நேரத்தில் கோடிக்கரை புகைவண்டி நிலையத்தில் இருந்து கலங்கரை விளக்கு நிலையம் வரை காடுகளில் வழி, ஒற்றையடிப் பாதை கூட இல்லாமல் இருக்கிறது. ஆகவே, புகைவண்டி நிலையத்தையும் கலங்கரை விளக்கு நிலையத்தையும் இணைக்கக்கூடிய வகையில் முன்னோடியாகவே அங்கு ஒரு பாதை போட பரிசீலனைச் செய்யப்படுமா ?

கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் : சாங்க்சுவரி என்று ஏற்பட்டு விட்டால் மற்ற சௌகரியங்களைக் கவனிக்கும் பொறுப்பை எடுத்துக் கொண்டு வேண்டியது செய்யப்படும்.

திரு. இரா. நெடுஞ்செழியன் : கோடிக்கரை வன விலங்கு உய்விடத்தில் என்ன வகையான வன விலங்குகளை வைத்து வளர்க்க அரசாங்கம் உத்தேசித்துள்ளது ?

கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் : எற்கனவே ஸ்பாட்டட் டியர்ஸ், ப்ளாக் பக் போன்றவை இருக்கின்றன. 29 பறவைகள் அங்கு வரப்போக இருக்கின்றன. அவற்றின் பெயர்கள் என்னிடம் இருக்கின்றன ;

திரு. சா. கணேசன் : இந்தப் பகுதியில் பறவைகள் இனம் மட்டுமின்றி தூர அளவாலும், அதிகமான தூரங்களிலிருந்து வருகிற விசேஷமான குறிப்பிட்ட பறவைகளும், விலங்குகளில் சில வகையான குதிரைகள் போன்ற விலங்குகளும் அங்கு காணப்படுவதை அரசாங்கம் அறிகிறதா ? அப்படியானால் அதனுடைய முக்கியத்துவத்தை உணர்ந்து அதை விரைவிலே செம்மைப்படுத்தி தேவஸ்தானத்தில் இருந்தாலும் சரி அல்லது வேறு எங்கு இருந்தாலும் சரி, இந்தக் காட்டு இடங்களையெல்லாம் நெறிப்படுத்தி அங்கு இந்த சரணாலயத்தை அமைக்க உடனடியாக முயலுமா ?

கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் : கனம் மெம்பர் அவர்கள் பொதுவாகப் பேசுவது போலிருக்கிறது. அதிகமான மான்கள் இருக்கின்றன. ப்ளாக் பக் என்பது மான்

1st August 1966] *[திரு. ந. நல்லசேனுபதி சர்க்கரை மன்ருடியார்]*

வகையைச் சேர்ந்ததுதான். ஒரு வகை குதிரை இருக்கிறது என்ருல் அது காட்டுக் குதிரை அல்ல. நம் குதிரைகளை காட்டில் வைத்து அதை பிடிக்காததால் காட்டுக் குதிரை என்கிருர்கள். அவை காட்டுக் குதிரைகள் அல்ல. நிறைய இல்லை. எங்கள் பகுதியில் கூட ஸ்டாலியன் வாங்கி வந்து விட்டு வைத்திருக்கிருர்கள்.

திரு. டி. கார்ச்சா கவுடர் : நாட்டில் உணவுப் பஞ்சம் அதிகமாக இருக்கக் கூடிய இந்தக் காலத்தில் ஆருயிரம் ஏக்கரை விலங்குகள் வளர்ப்பதற்காக விடுவது சரியா? இல்லை என்ருல் அதை அழித்து விட்டு அந்தப் பூமியை விவசாயத்திற்கு விட்டுக் கொடுத்து உணவுப் பொருள்களை அதிகமாக உற்பத்தி செய்ய ஏன் அரசாங்கம் அனுமதிக்கக் கூடாது?

கனம் திரு. ந. நல்லசேனுபதி சர்க்கரை மன்ருடியார் : அங்கு "ஸ்வாம்ப்" மாதிரி இருக்கிறது. சகதி என்று சொல்வார்கள். அங்கு உப்பு பாக்டரிக்குக் கூட ஆயிரக்கணக்கான ஏக்கர் கேட்டிருக்கிருர்கள். ஆயிரக்கணக்கான ஏக்கர்கள் கொடுக்கப்பட்டிருக்கிறது. மற்றவையெல்லாம் "ஸ்வாம்ப்".

திரு. இரா. நெடுஞ்செழியன் : இந்த வன விலங்குகள் பறவைகள் உய்விடம் சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கும் வகையில் அமையும் என்று குறிப்பிட்டார்கள். அப்படி ஈர்ப்பது பயணிகள் கண்டு களிக்கவா அல்லது வேட்டையாடி மகிழவா?

கனம் திரு. ந. நல்லசேனுபதி சர்க்கரை மன்ருடியார் : உய்விடம் என்று சொன்னுல் வேட்டை ஆடக் கூடாது.

பறவைகளை வேட்டையாடத் தடை

***15 கேள்வி.—திரு. பி. முருகையன் :** கனம் கூட்டுறவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

அண்மையில் திருச்சி மாவட்டத்தில் உள்ள, துவாக்குடியை அடுத்த தேவராயன் குளத்தில் பறவைகளை சுடக்கூடாது என்று தமிழக அரசு உத்திரவு பிறப்பித்தது உண்மையா?

கனம் திரு. ந. நல்லசேனுபதி சர்க்கரை மன்ருடியார் : ஆம், ஐயா.

திரு. பி. முருகையன் : அங்கு என்னென்ன வகையான தேசியப் பறவைகள் காணப்படுகின்றன? அங்கு இயற்கையாகவே அவை வளர்ந்து கொண்டிருக்கின்றனவா அல்லது செயற்கை முறையில் அப்பறவைகள் வளர்க்கப்படுகின்றனவா?

கனம் திரு. ந. நல்லசேனுபதி சர்க்கரை மன்ருடியார் : அங்குள்ள இனங்கள், கூஸ் (வாத்து), வர்ண நாரை, பெரிய தாரா இந்த மூன்றும்தான் வின்டர் ஸீஸனில் வருகின்றன, அவை நவம்பர், டிசம்பர், ஜனவரி பெப்ரவரி மாதம் வரை இருக்கும்.